செ.வெ.எண்: 57 நாள்: 25.10.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.10.2021) நடைபெற்றது.

வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து காணொளி காட்சி மூலம் மனுக்களும், மனு பெட்டி மூலமாக குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 132 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலா்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவா் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவா்கள் உத்தரவிட்டார்.

மேலும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் வேதாரண்யம் செட்டிபுலம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சுந்தரி என்ற மாற்றுத்திறனாளிக்கு ஊன்றுகோலையும், திருக்குவளை வட்டம் ஆய்மூர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி திரு.மணிமாறன் என்பவருக்கும், மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி திரு.கலியபெருமாள் என்பருக்கும் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலா் திருமதி.வி.‘கிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.சௌமியா, மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலா் திரு.சீனிவாசன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**